Crl. Misc.39

Pg. /2023

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 39/2023**

**Deposition of Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | அபிராமி | Taluk | |
| Husband Name | நாகராஜ் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 11.06.2025.** | | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1)எனது திருமணம் எப்போது நடந்தது என்றால் 12.09.2018 நடந்தது. எங்கு நடந்தது என்றால் மதுரையில் நடந்தது. திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் வீட்டில் கூட்டுகுடும்பமாக இருந்தோம் என்றால் நானும், எதிர்மனுதாரரும், தாயாரும் இருந்தோம். எதிர்மனுதாரருடைய அக்காவுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் தெரியாது. எனது திருமணத்தின்போது எதிர்மனுதாரருடைய அக்கா மற்றும் அவரது கணவர் கப்பலூர் என்ற ஊரில் வசித்து வந்தார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரருடைய அக்கா மற்றும் அவருடைய கணவர் என்னை கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளது பொய் என்றும், அவர்கள் அப்போது ஊரில் இல்லை என்றால் சரியல்ல.

2) திருமணமான ஒரு மாதத்திலேயே 1ம் எதிர்மனுதாரர் எனது அண்ணனுக்கு தொழில் தொடங்க ரூ.50 ஆயிரம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரியும் என்றும் என் முன்னிலையில்தான் கொடுத்தார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மதுரையில் இருந்து நான் கருருக்கு எப்போது வந்தேன் என்றால் என் அம்மா இறந்ததற்கு பிறகு வந்தேன். நான் சொல்வது பொய் என்றும் அதற்கு முன்பே வந்துவிட்டேன். எனது பிரமாண

**Sd/-R.Mahesh**
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் மளிகை கடை வைத்து மாதம் ரூ. 30 ஆயிரம் சம்பாதித்து வருகிறார் என்றும், அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) எதிர்மனுதாரர் மளிகை கடை வைக்கவில்லை என்றும், அவர் தினக்கூலி யாகத்தான் வேலைக்கு சென்று வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 19.01.2022 ம்தேதி கரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளபோது அதன் மீது மேல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அந்த புகார் பொய் புகார் என்பதால்தான்மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 12.07.2021 ம்தேதியன்று ரூ. 20 பத்திரத்தில் 1ம் எதிர்மனுதாரர் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளபோது அவ்வாறு கையொப்பம் செய்தால்தான் உன்னுடன் சேர்ந்து வாழ முடியும் என்று நான் சொன்னதால்தான் அவர் கையொப்பம் செய்தார் என்றும் அதற்கு மறுநாளே நான் சேர்ந்து வாழாமல் நான் கருருக்கு வந்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு தாக்கல் செய்த மனுவானது எதிர்மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்றும், அவரது பணம் மற்றும் நகைகள் பெற வேண்டுமென்ற நோக்கத்தில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது அம்மா , அக்கா மற்றும் அக்கா கணவர் ஆகியோர்கள் மீது பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விவாகரத்து உத்தரவின் மீது மேல் முறையீடு செய்தேனா என்றால் இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/-R.Mahesh**
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.